ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 2—4—44 | இதழ் 5.

கைவல்யம்

## சைவத்தை நிலைநாட்ட.

மதுரை சைவ சித்தாந்த சபையில் கலியாணசுந்தர முதலியார் தலைமை யுரையை, பாரததேவி, சுதேசமித்திரன் பத்திரிகைகளில் எழுதப்பட்டிருக்கிறது. ஒன்றிலுள்ளது மற்றொன்றிலில்லை. பாரததேவியின் பிரசுரத்தின் தலைப்பில் அரசியல் அதிகாரம் கிடைத்தால்தான் மதம் ஒன்றுபட்டு சைவத்தை நிலைநாட்டமுடியுமென்று பெரிய எழுத்தில் எழுதியிருக்கிறது.

சைவம் கலை முதலியவைகளை வளர்க்க வேண்டுமானால், அரசியல் அதிகாரம் நம் கையில் இருககவேண்டும். அரசியலதிகாரம் நம் கையிலில்லாமல் சைவம் முதலியவைகளை வளர்க்கமுயற்சித்தால் நமக்குள் பழைய மதம் முதலியவைகள் சம்பந்தமாகச் சண்டை சச்சரவுகள் ஏற்படும், அரசியலதிகாரம் மக்களுக்குஇன்றியமையாதது என்கிற பேச்சும் சைவப்பிரசங்கத்திலிருக்கிறது.

அரசியல் அதிகாரம் மக்களுக்கு இன்றியமையாததுதான். அது எப்படி வரும்? உலகப்பொதுவிதியை உல்லங்கனம்செய்யும் பாவிகளுக்கு வருமா? அற்பத்தனமான ஜாதியால் நேர்வழியைவிட்டு பொய்யும் புரட்டும், தந்திரமே பூர்வீகம் என்று நடக்கும் மக்களுக்கும், அவர்கள் பின் செல்லும்மக்களுக்கும் வருமா? புரோகிதக் கூட்டுக்கும், கோவில் கட்டுக்கும், குருட்டுத்தனமாகக் கீழ்ப்பட்டிருந்த தளையை வெட்டித் தன்மதிப்பைக்காக்கக்கற்றஜாதியார்கள்தானே அரசியல் அதிகாரத்தை அடைந்தார்கள் என்பது உலகெல்லாம் நடந்தும், நடந்துகொண்டு வருவதாகவுமிருக்கிறது. பாதிரிகளுடைய புரோகித அதிகாரத்தைத்தொலைத்த பிறகுதான் ஐரோப்பா ஜனங்களே அரசியல் அதிகாரப் பாதையில் செல்ல முடிந்ததென்று ஐரோப்பா சரித்திரம் சொல்லுகிறது. உண்மையைப் பேசும் உத்தமர்களும், அதையே பிரசங்கம் செய்கிறார்கள். முன்னே போகவேண்டியவன் பின்னே பார்த்து நடந்தால் முன்னே எப்படிப் போகமுடியும்? கலைக்கும், காவியத்திற்கும், சமயத்திற்கும், கர்த்தாவாயிருக்கும் நம்நாட்டுப்பெரியவர்கள் மக்கள்முன்னே நடந்தால் தங்கள், ஆதிக்கமும், உயர்வும் இலாபமும் போய்விடுமேயென்பதை நினைத்துச்சைவசபைகளில் சபைக்குஅவசியமில்லாததையும் நியாயமில்லாததையும், பேசுகிறார்கள். வரவேற்புத்தலைவர் தோழர் சுவாமிநாத தேசிகர், மதுரையே சைவத்திற்கு அரண்போன்றதென்பதை விளக்கினார். ஆம், அரண்போன்றதே, மதுரையில்தான் சிவபெருமான் அறுபத்திநான்கு திருவிளையாடலுமாடினார். மதுரைப்பாண்டியஇராச்சியத்தில், பாண்டிய [illegible] சொப்பனம் சொல்லாத இரவு கிடையாது, காட்சி அளிக்காத பகலில்லை. மோட்சம் மனிதனுக்குமட்டுமல்ல, குருவி, கொக்கு, பன்றி முதலியவைகளுக்கெல்லாம் மோட்சம், பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்து வளர்த்து மந்திரியுமாக்கினார், சேனைக்குக்குதிரை வாங்கப்போன மந்திரிஅந்தப் பணத்திற்கு கோவில்கட்டினதற்கு ராஜா தண்டிக்க, நரியைப்பரியாக்கினார், பரியை நரியாக்கினார், பாண்டியனால் பிரம்படிப் பட்டார். அப்பொழுது அரசியல் அதிகாரத்திற்கு அளவில்லை. மற்றமதஸ்தர்களைக் கழுவில் ஏற்றவும், கட்டையில் எரிக்கவும் சமய ஆச்சாரிகளின் மனதில் அரசியல் அதிகாரம் விளையாடிக்கொண்டிருந்தது. சிவபக்தர்களே சிப்பாய்கள், இப்படி இருந்த மதுரையில், அரசியல் அதிகாரம் எப்படிப் போயிற்று? அப்படித்தானே தஞ்சாவூருமிருந்தது. தஞ்சாவூரில் மராட்டா அதிகாரமும், மதுரையில் வைணவ அதிகாரமும் என் வந்தது? வருவானேன்? வந்ததற்குக் காரணமென்ன? என்பவைகளிலுள்ள நன்மைதீமைகளை விபரமாக எடுத்துச் சொன்னால் அல்லவா சைவமும்மக்களும் தெரிந்துகொள்வார்கள்.

சைவ சித்தாந்த சபைகளில் சைவத்தின் உண்மைதத்துவங்களைச் சொல்ல வேண்டும். சொல்லியிருந்தால் அதோடு நிறுத்தவேண்டும். அதைவிட்டுப் பார்ப்பார்கள் மற்றச் சமூகங்களை அருமையாகக்கொண்ட கதைகளைப் பரப்புவதற்காக மானத்தைவிற்றுவிட்ட தோழர் கலியாணசுந்தர முதலியாரைச் சைவசமயச் சபைக்குத் தலைவராகவைத்து அதில் கம்பர் செய்த புரட்சி (அனுமானுக்குச் சொன்ன பதிலில் கம்பர்செய்த புரட்சியின்கவி அழகைப் பார்த்தீர்களா? சீதை அனுமானைக்கண்டு பேசும் சந்தர்ப்பம் போன்றசந்தர்ப்பங்களில் குப்பைவாரும் பெண்களிலிருந்து மாடமாளிகையிலிருக்கும் பெண்கள் வரையிலும் கம்பன் உதவியில்லாமல் சித்தரித்து சொல்லும் வார்த்தைகளை நாளை வியாசத்தில் எழுதுகிறேன்) ஆடல் கலை அவசியம், எல்லாரும் கற்றுக்கொள்ள வேண்டும், கற்புடைய பெண்களுக்குக் குறிப்பு அதிகம். இவைகள் சைவ சித்தாந்தத்தின் அங்கமா? சைவசபைத் தலைவர்களின் அங்கமா? பெண் உலகம் [illegible] கலியாணசுந்தர முதலியார்தான் கற்புடைய பெண்களுக்கு கூட்டத்தில் குறிப்பு அதிகமென்பதின் அர்த்தத்தைச்சொல்லவேண்டும். அநேகநாளாகப்பார்ப்பனரின் எண்ணத்திற்கே பாடுபடும்படியான முதலியார் எதற்குத்தான் பதில்சொன்னார். முதலியாரிடம் சண்டைபோட்டுக்கீர்த்தி சம்பாதிக்க அவரிடம் நான் சண்டை போடுவதல்ல. அவர் இருபது இருபத்தைந்து வருடமாக நம்மவர்களுக்குச் செய்துவரும் தீங்குக்கே சண்டைபோடுகிறேன்.

சைவர்களே! சுயமரியாதைக்காரர்கள் சைவத்திற்குப் பகைவர்களல்ல, நானும் சைவந்தான், எனது முன்னோர்களும் தமிழர்கள்தான். நம்முடைய ஆதிசைவத்தைக்கெடுத்து நம்மவர்களை, எல்லாம் சூத்திரர்களாக்கி நமதுசிவத்திற்கும் நூல் போட்டுப்பார்ப்பானுக்கிக் கொண்டு பார்ப்பார்களைக்குற்றம் சொல்லுகிறேன். இவர்கள் ஏற்பாட்டுக்கு உடந்தையாகவிருக்கும்பண்டிதர்களைக் குற்றம்சொல்லுகிறோம். இந்தப் பண்டிதர்களே நம் பூர்வீக சிவத்திற்குவிரோதிகள். இவைகளை ஆலோசித்துப் பார்ப்பவர்களுக்கு இதன் உண்மை விளங்கும்.

அப்பொழுது சிவபெருமான் அறக்கருணைபுரிந்தார். உலகமும் நாமும்செவிசாய்க்கவில்லை. இப்பொழுது மதக்கருணை உண்டாகப்பொழிகிறார், இதற்காகநாம் இனியும் உருகி, உருகி அழவேண்டும். அவரிடம் அடைக்கலம் புகவேண்டும் என்று சைவத்தலைவர் சொல்லுகிறாரே,

(2 ம் பக்கம் பார்க்க)

## சைவத்தை நிலைநாட்ட.

1-ம் பக்கத்தொடர்ச்சி.

இதனால் என்னபலன்? உருகி, உருகி அழுது அடைக்கலம் புகுந்து பார்ப்பானுக்கு இரண்டு வாய்ச்சோறும், பட்டு பட்டாடையும், மாதகாணிக்கை கொடுத்துக் கண்டபலனேயல்லாமல், வந்த பலன் என்ன? சைவப்பண்டிதர்களே சைவர்களே எத்தனையோ சாஸ்திரிகளின் பிரசங்கங்களைக் கேட்டிருப்பீர்களே! எந்தச் சாஸ்திரிகளாவது சனாதனசபையிலோ, பிராமண சபையிலோ, வர்ணாஸ்ரமமகா சபையிலோ இனியும் உருகி உருகி, அழு என்று பிரசங்கம் செய்திருக்கிறார்களா? உருகி உருகி, ஒட்டாண்டியாகச் சொல்லுகிறார்களா? தேம்பித்தேம்பி அழும் பிள்ளைகளின் அப்பத்தைஅழாதபிள்ளை தின்றுவிடாதா? தின்றுவிடுமே. சிவபெருமான் அன்று அறக்கருணைபொழிந்தார், உலகமும் நம் மனமும் செவிசாய்க்கவில்லை என்று முதலியார் சொல்லுவதைக்கேட்டால், நமது மனதின் சக்தியும் காதின்தன் இச்சையும் சிவபெருமானின் சக்திக்குப் பெரிதாகவல்லவோ இருக்கிறது. உலகம் சிவபெருமானின் உள்ளத்தில் அடங்கவில்லைப்போலல்லவா இருக்கிறது.

சைவர்களே, உங்களுக்குத்தெய்வமிருக்கிறது. உண்மையும் சத்தியமும் சித்தாந்த சாஸ்திரங்களிலுமிருக்கிறது, செல்வமும் மற்றெல்லாமுமிருக்கிறது. இவ்வளவிருந்தும் நீங்கள் அரசியல் அதிகாரம் இருந்தால்தான் சைவத்தை வளர்க்கமுடியும், தடையை நீக்கமுடியுமென்றுசபைசொல்லுகிறதே, இதை எங்கிருந்து கற்றுக்கொண்டீர்கள்? யார் சொல்லிக் கொடுத்தார்கள்? நம்முடைய எந்தக்குறைபாட்டிற்கும் அரசியல் அதிகாரம்வேண்டுமென்று அரசியல் வாதிகள் சொல்லுகிறார்களே, அதைச் சொல்லுகிறீர்களா? உங்கள் தலைவர் தேசிய சபையில் புராணத்தைப்படித்து அதைக் கிராமங்களில் சொல்லுங்களென்பதும் சைவசபையில் தேசியத்தைச் சொல்லுவதும் வழக்கமாயிற்றே, அவருடைய ஏற்பாடா? அரசியல் அதிகாரம்வந்தால் பண்டுசெய்ததுபோல கழுவேற்றவும், கட்டையில் கொளுத்தவும் தாழ்ந்தவர்கள் சிவாவென்றாலோ தீட்சை என்றாலோ நெருப்பிலிட்டுப்பொசுக்கவுமா? அரசியல் அதிகாரத்தில் ஆசைவந்திருக்கிறது. பின்னால் வரும்இராச்சிய சீர்திருத்தத்தின் ஒட்டுக்கு முன் ஜாக்ரதையாகப் பார்ப்பான் மனம்குளிர முதலியாரின் தூதின் இலட்சணமா? பின் எதனால் அரசியல் அதிகாரம் சைவம் தழைப்பதற்குவேண்டுமென்று தீர்மானம் பண்ணினீர்கள்.

அழலுருவனும், அங்கையற்கண்ணி அம்மையும் ஆயிரதேவவருடம் போகித்து முருகனைப்பெற்று, அவரை திருஞானசம்பந்தராகவும், கைலாயத்தின் பள்ளியறையில்திலக்கண்ணாடியைப்பார்த்து, அழகைக் கண்டு அந்த அழகில் சுந்தரரைப்பெற்று இருபிள்ளைகளையும் பூலோகத்திற்கு அனுப்பின சிவபெருமான் இனி அவ்விதமாகப் பிள்ளைகளைப் பெறவும் அனுப்பவும் ஈ. வெ. பெரியார் ஒத்துக்கொள்ள மாட்டார். இப்பொழுது பூணூல் போட்டுக்கொண்டிருக்கும் சிவபெருமானை அக்கினியில் முழுக வைத்து, அவரை ஆதித்திராவிடநாட்டுச் சிவபெருமானாகச்செய்யவே சுயமரியாதைச் சங்கம் வந்திருக்கிறது.

அரசியல் அதிகாரம் வந்தால் இராமராஜ்ஜியத்தைக் கொண்டு வருவோம் என்று தோழர் காந்தியும், காங்கிரசும் சொன்னதால் வடக்கே உள்ள முகமதியர்கள் இந்துராச்சியத்தை நிலைநிறுத்தப் பார்க்கிறார்கள் என்று பாகிஸ்தான் கேட்பதுபோல, இங்கும் நீங்கள் சைவத்தை நிலைநிறுத்த அரசியல் அதிகாரம் வேண்டுமென்கிறீர்களானால், இங்கும் அவர்கள் பாகிஸ்தான் கேட்பார்கள். இதையும் ஆலோசித்துப் பேசுங்கள். முடியவில்லை, விட்டதைப்பின்னால் எழுதுவோம்.

# தமிழரே தயங்காதீர்!

S நாராயணசாமி.

மனிதர்கட்கு மானம்என்பது வாழ்வு. அதிலும் நம் தனிமொழியாகிய, அமுதினும் இனியசுவைமொழியாகிய இன்பத்தமிழ் நாட்டிலேபிறந்து தமிழ்மொழியை உண்டுகளித்து உற்சாகத்துடன் வாழ்ந்துவந்த நம் முன்னோர்கள், மூதாதைகள், மூவேந்தர்கள், முதலானவர்கள் மணிமொழியாகிய இன்பத்தமிழை எவ்வளவு இனிமையாகவளர்த்து அதனிடம்களித்து, ஆனந்தமுடன் வாழ்ந்தார்கள். அத்தகைய பண்டையசிறப்பு வாய்ந்த இத்தமிழ்நாட்டிலே பார்ப்பனிய ஆட்சிஎன்ற பாதகப்படுகுழி, பயங்கரச் சுழலாகிய வஞ்சகநரிவந்து வாசம்செய்ய நேர்ந்தது. தமிழர்வாழ்வைத்தாழ்த்திற்று. செந்தமிழ்நாட்டை, செல்அரிப்பதுபோல் அரித்துவிட்டது. தேன்மொழியாகிய சுவைத்தமிழ்ப்பாலிலே வடமொழியாகிய விஷத்தைக்கலந்து, தமிழர்கள் அதைஉண்டு மயங்கிமானமிழந்து, மதியிழந்து, வாழ்விழந்து, வதையச்செய்துவிட்டது. அதுவுமல்லாமல் கலை ஆரிய வலையில்அகப்பட்டு அச்சுமுறிந்துவிழுந்த வண்டியைப்போல்ஆகிவிட்டது. இத்தகையகொடுமைபுகுத்திய வஞ்சகஆரியத்தை தன்மானத்தமிழர்களாகிய தமிழ்நாட்டு இளைஞர்கள் இதனைஉணர்ந்து, வைதிகத்தை வெட்டிபுதைத்து வஞ்சகநரியைவாள்கொண்டுசித்திரவதைசெய்து ஆரியமென்னும் அக்ரமவலையைக் கிழித்தெறியச்செந்தமிழ்ச்செல்வர்களாகியநாம் ஒவ்வொருவரும் உழைக்கமுன்வரவேண்டும். அல்லது உழைப்பவருக்கு ஊக்கமளிக்குமாறுஉதவிபுரியவேண்டும். ஆரிய மதம்-கடவுள், ஆசாரம்-பூசை, புனர்க்காம்ரமுதலியபொல்லாச்செயல்களைப் புறக்கணிக்கவேண்டும். தமிழர்களாகிய நம் முன்னோர்கள் வாழ்ந்தவாழ்வை எண்ணிப்பாருங்கள். மலையைப்பிளந்து எடுத்துமாபெரிய கோட்டைகள் அமைத்தவர் யார்? வெஞ்சமரில் அஞ்சாமல் எதிரிகளுக்கு எமன்என்ற வைராக்கியத்துடன் வாள்கொண்டு போர்புரிந்த வீரர்கள் யார்? கடலில் மரக்கலம்செலுத்திய மன்னர்கள் யார்? மாற்றானுக்கு மண்டியிட்டு அடிமைப்படாமல்வாழ்ந்தவர்யார்? அத்தகைய வீரத்தமிழர் வாழ்ந்தநாட்டிலே, அவர்கள் ஆண்டஇச்செந்தமிழ்ப் பூமியிலே நாம்பிறந்து அவர்களைப்போல் தன்மானத்தோடும் வீரத்தோடும், பகுத்தறிவோடும் வாழாமல் பார்ப்பனியமென்னும் பாதகப்பரவையோடு வாழ்வது தகுமா? தமிழ்நாட்டில்உதித்த வீரஇளைஞர்களாகிய நமக்குஅடுக்குமா? கண்ணிருந்தும் குருடனைப்போல், காலைச்சுற்றிலவிடலாமா? நாம்போகும்பாதை கொடிய வியாதிகளைப்பரப்பும் பூச்சிகளைக்கொண்டதாகஇருக்கிறதுஎனத்தெரிந்தும்அதனை அப்படியேவிடலாமா? உடனே அதை அகற்றி அவ்வழியை மற்றவர்களுக்குப் பயன்படுமாறு நாம்செய்யவேண்டாமா? அதைப்போல் நம்வாழ்வைக்கெடுக்கும் கொடியஆரியப்பூச்சியை நாம் வதைசெய்து நம்தமிழ்நாட்டைப் பழயபடி செழித்தோங்க நாம் முன்னிற்கவேண்டாமா. தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கம் முழங்கவேண்டாமா? நாம்முழங்கும் செந்தமிழ்த்தொனியைக் கேட்ட ஆரியம் தலைகுனிந்து உடல்நடுங்க, கால் பிடரியில் பட ஓடிஒளித்துக்கொள்ள வேண்டாமா? தமிழ்நாட்டில் புதுமலர் பூத்து மக்களிடையே மணத்தைவீச ஆரம்பித்துவிட்டது. வைதிகம் வந்தவழிதெரியாமல் மறைந்துவாழ வேண்டாமா? அத்தகைய தமிழ்மணம் வீசச்செய்வது தமிழர்கள் முதற்கடமை. தமிழரே விழித்துஎழுந்திருங்கள்! தரணி எங்கும் தமிழ்மலர்கள் பூக்கச்செய்யுங்கள்! வைதிகத்தை வளரவிடாதீர்கள்! வஞ்சனை நரியின்வாழ்வினங்களை களைந்தெரியுங்கள். தமிழ்நாடு தமிழருக்கே! என்றுசங்கொலிமுழக்குங்கள். ஆரியம் சாயும்! அடிமைத்தனம் ஒழியும்! வைதிகவலைகிழியும்! வருணாஸ்ரமம் அழியும்! இத்தகைய செயலைச்செய்யத் தன்மானத்தமிழர்கள் முன்வரவேண்டுகிறோம்.

தமிழரே தயங்காதீர்!

தொடர்கதை

# பார்வதி பி. ஏ;

சௌமியன்.

கதை கற்பனையே, கதையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:-லோபி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறார். அவருக்கு வாரிசாகவர இருக்கும் பார்த்திபன் எனும் வாலிப வாய்வீரனுக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயிக்கிறான். குமார் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறாள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனால் 'ரட்சகன்' என்னும் பத்திரிகை நடத்தப்படுகிறது. தங்கள் குமரகுபரர், பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதமுண்டாகும்படி வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறார். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு நரசிம்மன் என்பவன் காதலனாகிறான். பார்த்திபன், கதகளிநடனம் பார்க்கக் கேரளம் செல்கிறான். உத்தமி கருவுற்றாள். நரசிம்மன், குமுதினி என்பவளைக் கலியாணம் செய்து கொண்டு, உத்தமியைக் கைவிடுகிறான், குமுதினியின் உதவியால் உத்தமி பெங்களூர் செல்கிறாள். அங்கு லேடிடாக்டர் லலிதா தன் கதையைக் கூறுகிறாள். பிறகு,....]

ஆண்டாளின் எண்ணமெல்லாம், பரிதாபத்துக்குரிய உத்தமிக்குஊறுநேரிடாதபடி தடுக்கவேண்டும் என்பதுமல்ல, சமுதாயக்கோளாறுகளைத் தீர்க்கவும் நற்காரியம் செய்யவேண்டும் என்பதுமல்ல, எப்படியாவது கோபங்கொண்டுள்ள தன் கணவனுக்குச் சாந்திஏற்பட்டு, குடும்பத்திலே வேறு எவளாவதுபுகாதபடி தடுத்து தானே கிருகலட்சுமியாக வாழவேண்டும் என்பதுதான். லேடிடாக்டரின் மனப்போக்கும், அவளுக்கு உத்தமியிடம் வளர்ந்துவந்த அன்பும், அவர்கள் இருவரும் கூடிக்கூடிப்பேசிக் கொள்வதும், ஆண்டாளுக்குப் பிடிக்கவில்லை. இப்படிப்பட்டவர்களிடம், குடும்பத்தையும் குலத்தையும் பாதிக்கக்கூடிய சம்பந்தம் கொள்வதா என்று சிந்திக்கலானாள். அந்தச்சிந்தனை அவளுக்குச் சஞ்சலத்தை வளர்த்தது. வர இருக்கும் ஆபத்தைத் தடுக்க வேண்டி, வளர்ப்புப்பிள்ளையை சேர்த்துக்கொண்ட பிறகு, தனக்கே குழந்தை பிறந்துவிட்டால் என்ன செய்வது? என்ற திகிலும் தோன்றலாயிற்று. காரியம் முடியுமட்டும் சும்மா இருந்துவிட்டுப்பிறகு உத்தமியோ லேடிடாக்டரோ கபடத்தை வெளிப்படுத்திவிட்டால் என்னசெய்வது என்ற பயமும் புகுந்துவிட்டது. உத்தமியின் குழந்தை வளர்ந்த பிறகு, உண்மை எப்படியாவது தெரிந்து சொத்தை, உத்தமிக்கும் அவளுக்கு வேண்டியவர்களுக்கும் செலவிட்டால் என்னசெய்வது என்ற எண்ணமும் குடையலாயிற்று. இதனால், கருவுற்றிராவிட்டாலும்கூட, ஆண்டாளுக்கு மயக்கமும் வரத்தொடங்கிற்று. எதிர்காலத்தை மிகவும் பாதிக்கக்கூடிய இந்தப்பெரிய விஷயத்திலேதான் அவசரப்பட்டு, தாறுமாறான செயல்புரியத் துணிந்ததை எண்ணித்திகைத்தாள். வேண்டாதவள் வயிற்றிலே வேதனைப்பிண்டமாக உள்ள அந்தக் கருஎன்வயிற்றிலேஉலவினால், மனதுமகிழ்ச்சியில்மூழ்குமே என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள். ஒட்டுச்செடிபோல, உத்தமியின் குழந்தையை, பிராமணகுலத்திலேசேர்க்கப்போகிறோம், இதனால்என்னென்ன அசம்பாவிதம் நேரிடுமோ என்று அஞ்சினாள். இந்தஎண்ணம்உதித்த பிறகு, வெகுவிரைவாக அது வளரத் தொடங்கிற்று. விநாடிக்கு விநாடிவிசாரம் வளர்ந்துகொண்டே சென்றது. ஏதாவதோர் முடிவுக்கு வந்தாகவேண்டும், இல்லையேல் காலமுழுதும் கண்ணீர்விட வேண்டும் என்றுஅவளுக்குச் சதாயாரோ கூறுவதுபோலிருந்தது. தனக்கு உதவி செய்ய வந்த உத்தமியிடம்முதலிலே காட்டிய அன்புமாறி, பொறாமை உண்டாயிற்று. "இந்தப் பாவிக்குத் திருட்டுத்தனமாக உண்டான கரு, எனக்கு ஏனோஉண்டாகக்கூடாது. அவளிடம்நாம், குழந்தையை அல்லவா தானம் கேட்கிறேன். என் கணவனை மகிழ்விக்க, அவள் குழந்தையை இரவல் பெறுகிறேன்" என்று ஏதேதோ எண்ணினாள், அழவும்தொடங்கினாள், துக்கமெனும் வெப்பம், பெருமூச்செனும் ஆவியாகி, கண்ணீர்பொழிந்தது. ஒருநாள்இவ்விதம், அழுதுகொண்டிருந்த சமயத்திலே, வழக்கமாகவரும் கணவன் வரக்கண்டு, கண்களைத்துடைத்துக்கொண்டு, சிரிப்பை வருந்தி வருந்தி அழைத்தாள், அசட்டுத்தனம் வந்து நின்றது.

"ஆண்டாள்! அழறயா? ஏன்? என்ன? உடம்புக்கு என்னடி? என்று கேட்டார், கர்ப்பிணிகள் அழக்கூடாது என்றுடாக்டர்கள் கூறக்கேட்டதுண்டு, எனவேஆண்டாள் கண்களைக் கசக்கிக்கொள்வது அவருக்குப் பிடிக்கவில்லை. கண்களைத்துடைத்தார், கன்னத்தைக்கிள்ளினார், "கண்ணல்லவோ! எதற்காக அழுகிறாய். வயிற்றை வலிக்கிறதோ?" என்று கனிவோடு கேட்டார், சுற்றுமுற்றும்பார்த்துவிட்டு ஒரு முத்தம்தந்தார், அவசர அவசரமா. மீண்டும் கேட்டார் "என்ன உடம்புக்கு?" என்று. "இவ்வளவு ஆசையும், எனக்குக் குழந்தை பிறக்கப்போகிறது என்ற சந்தோஷத்தால்தானே இவருக்கு உண்டாயிற்று. உண்மையைத் தெரிவித்தால், என்னை வெட்டிப்போடலாமா என்றல்லவா அவருக்குத்தோன்றும். ஐயோ! நான் என்ன செய்வேன்?" என்று ஆண்டாள் சொல்லவில்லை, ஆனால் அவளுடையகண்கள் பேசின. அவர்கண்டுகொள்ளவில்லை. அவளுடைய உதடு துடித்திடக்கண்டார், ஆஹா! ஆண்டாள்நல்ல அழகிதான்என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். அவள் மனதிலே மூண்டுகிடந்தது அவருக்குத் தெரியாது.

"தெய்வீகமானது காதல்! இதன் சக்தியே அபாரம். அது மன்னனை மண்குடிசை முன்பும் மண்டியிடச் செய்யும். மாவீரனையும் பணியவைக்கும்" என்றெல்லாம் கூறுகிறார்களே யொழிய, ஆடவர் உலகம், பெண்களிடமிருந்து எதிர்பார்க்கும் குதூகலமும் குடும்ப வளர்ச்சிக்கான மார்க்கமும் கிடைக்கக்காணுமற்போனால் அவர்களுக்கு ஆயாசம் மேலிடுகிறது, ஆசை கருகிவிடுகிறது, மோசமான நிலைமை ஏற்படுகிறது, என்பதை ஆண்டாள் எண்ணினாள், ஏக்கத்திலே மூழ்கினாள்.

"ஆண்டாள்! என்னசெய்றது சொல்லேன். வயித்தை ரொம்ப வலிக்கிறதோ" என்று கேட்டார், கபடறியாத கணவர். இலஜ்ஜையாலும் அச்சத்தாலும் ஆண்டாள் அனுமதிக்கவில்லை, இல்லையென்றால் வயிற்றைத் தடவி வலியைப்போக்கியிருப்பார் வாஞ்சையுடன்.

"குழந்தையாட்டமா அழுதுண்டே இருக்காதே. ஆண்டாள், பூரணகர்ப்பிணிகள் அழப்படாதுன்னு டாக்டர்சொல்றா. எதுக்கு நீ அழணும்"

"என் ஜாதகத்தைப்பார்த்தீரோ?"

"ஜாதகத்தையா? இல்லையே, ஏன்?"

"நான் என்னத்தைச் சொல்வேன். நேத்து ராத்திரி ஒருகெட்ட சொப்பனம் கண்டேன். அதைநினைச்சாலே கர்ப்பம் கலங்கறது. அழயும் தானவர்றது"

"அடி பித்துக்குளி! சொப்பனத்தை எண்ணிண்டா அழறது. அடிஅசடே! அப்படி என்னடி கண்டுட்டே, பிரமாதமான சொப்பனம்"

"அதை ஏன் கேக்கரேள்"

"சரி, சொல்ல வேண்டாம்"

(6ம் பக்கம் பார்க்க)

## அடுத்த இதழ்.

“திராவிடநாடு” அலுவல் நிலையத்தார் அனைவரும், 8—4—44 சனிக்கிழமையன்று மதுரையில் நடைபெறவிருக்கும் “சந்திரோதயம்” நாடகத்தைமுன்னிட்டு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே பறப்படவேண்டியிருப்பதாலும், திரும்பி வருவதற்குப் பின்னும் இரண்டு நாட்கள் ஆகுமாகையாலும், 9—4—44-ல் வெளிவரவேண்டிய 'திராவிடநாடு' 16-4-44ல் வெளிவரும் என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திராவிட நாடு

காஞ்சி 2—4—44 ஞாயிறு

# வாலாட்டம்!

★

பர்மாவில் இருந்த ஜப்பானியப்படை இப்போது பர்மா எல்லையைத்தாண்டி மணிப்பூர் சமஸ்தானத்துக்குள் நுழைந்துவிட்டதென்ற செய்திகடந்த நாலைந்து நாட்களாகக் கேட்கப்படுகின்றது. இதன் விளைவு என்னவாகுமோ என்ற பயம் மக்களுக்குஏற்பட்டுவிடாதபடிநேசப்படைகளின் எதிர்த்தாக்குதல்,எதிர்பார்த்தபடி ஜப்பானியருக்குப் பெருத்த சேதங்களை உண்டாக்கிவருகிறது. கடந்த நாலைந்து நாட்களுக்குள், பல ஆகாயவிமானங்களையும், பர்மாவிலுள்ள ஒரு முக்கியமான எண்ணெய்க்கிணறையும், சில போர்க்கப்பல்களையும் நேசப்படை நாசமாக்கிவிட்டது. போர்முனையிலுள்ள ஒருயுத்த நிருபர் கூறுவதுபோல, ஜப்பானியப் படை இப்போது அடிபட்ட புலிபோலாகிவிட்டது. அடியின் வேகத்தால் ஏற்பட்ட களைப்புத்தெளிந்து மீண்டும் அந்தப்புலி வாலை ஆட்டினால், நேசப்படையாகிய சிங்கம் அதன் வாலைக்கடித்து வாயைப் பிளக்க வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. என்றாலும், பதுங்கிப்பாயும் சுபாவம் புலிக்குண்டென்பதைச் சிங்கம் மறந்துவிடாமல் முன் எச்சரிக்கையுடன் அதனிடம் போர்புரிய வேண்டும். இது, நேசப்படைகளுக்கு நாம் விடுக்கும் எச்சரிக்கையும், காட்டும் ஊக்கமுமாகுமேயன்றி, அதனிடம் சந்தேகம் கொண்டு கூறுவதன்று.

இந்தியாவில்வந்து குவிந்துகிடக்கும் படைபலத்தை அறியாமலே ஜப்பானியர் தங்கள் ஆரம்ப சூரத்தனத்தைக்காட்டத் தொடங்கியிருக்கின்றனர். இவர்களின் சூரத்தனம் சீரழிவதற்கு, இருப்பது போதுமென்றதிருப்திகொள்ளாமல்,இன்னும் அதிகமான படைபலமும் போர்க்கருவிகளும் தயார்செய்யவேண்டுவது இந்தியாவின் நலனைக்குறித்துமட்டுமல்ல, உலக சமாதானத்தையும் குறித்தே இதை நாம்வற்புறுத்திக் கூறுகிறோம். இந்தியாவின் பாதுகாப்புஉலகப்பாதுகாப்பாகும். போர்ப்புயலினின்றும் இவ்வுபகண்டம் பாதுகாக்கப்படுவதன் அவசியத்தை நாம் வற்புறுத்துவது நம்முடைய கடமைகளில் முக்கியமாகும். நேசநாட்டினர் இதனைப் பாதுகாப்பது அவர்களின் நலனைக் குறித்ததாகும். இவ்வுபகண்டம் பாதுகாக்கப்பட்டால், இப்போது ஜப்பானியர் வசமாகியுள்ள சிங்கப்பூர், பர்மா, அந்தமான் முதலானநாடுகளைத் திரும்பப் பெறுவதற்கு மிகவும் அநுகூலமாய் இருக்குமென்பதை நாம் பிரிட்டாஷாருக்கு வற்புறுத்திக்கூறவிரும்புகிறோம்.

எனவே, “ஆழமறியாமல் காலை விட்டோம், வால் அறுபட்டோம், இனித் தப்பித்துக்கொள்ள வகையறியோம்” என்று தவிக்கும் முறையில் நேடுநாடுகள் தங்கள் திறமையைக் காட்ட முன்வர வேண்டுமென்பதோடு, இவ்வுபகண்டத்திலுள்ள அனைவரும் தங்களாலான உதவி அனைத்தையும் செய்து ஜப்பானியரின் வாலாட்டத்தை அடக்கி முறியடிப்பதில் துணைபுரிவதையே இன்றைய குறிக்கோளாகக்கொள்ளவும் வேண்டும்.

## நாடகதேதி மாற்றம்.

9—4—44 ஞாயிற்றுக்கிழமை மதுரை கோபாலகானசபா தியேட்டரில் நடைபெறவிருந்த சந்திரோதய நாடகம், கொட்டகைமாற்றம் காரணமாக 8-4-44 சனிக்கிழமைக்கு மாற்றப்பட்டு விட்டதென்பதையும், மதுரையிலுள்ள **கோபாலகிருஷ்ண டாக்கீசில்** நாடகம் நடைபெறுமென்பதையும் அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, நாடகத்தில் தோழர்கள்C. N. அண்ணாத்துரை M. A, C. V. M. அண்ணாமலை, T. P. S. பொன்னப்பா, C. V. இராசகோபால், D. V. நாராயணசாமி, S. நாராயணசாமி, இராசேந்திரன், வெங்கடராமன், சீனுவாசன், கோவிந்தராசன், சுந்தரேசன், ஷரீப், சுப்பரமணியம, சாமிநாதன், போளூர் சுப்பிரமணியம் முதலானவர்கள்நடிக்கின்றனர் என்பதையும், தோழர் சண்முகானந்தாவின் ஆர்மோனியமும், தோழர் ஆபிலாவின் தபேலாவும் பக்கஇசையாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## குடந்தையில் செல்வம் தினம்.

குடந்தை, திராவிட மாணவர் கழகத்தார், 27-3-44 செல்வம் நாளைச்சிறப்புற நடத்தினர். பெரியார் கலந்துகொண்டார். தோழர் N. R. சாமியப்பா அவர்கள் தலைமை வகித்தார். டாக்டர் A. கிருஷ்ணசாமி அவர்கள் விரிவுரையாற்றினார்.

# வாழ்த்துகிறோம்.

பதினைந்து ஆண்டுகளுக்குமேலாகச், சென்னைசர்க்கார்,சர்.அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் அவர்களை, அட்வகேட்ஜெனரலாகக் கொலுவீற்றிருக்கச்செய்தனர்.இந்தப்பதவி நிரந்தரமாகவே அல்லாடியாருக்கு ஏற்பட்டுவிட்டதோ என்றுமக்கள் எண்ணவுந்தொடங்கினார்கள் இப்போது அவர், ராஜினாமாசெய்து விட்டார். அவர் போனாலென்ன, அக்ரகாரம் வேறோர் “ஸ்ரீஜத்தை” அட்வகேட்ஜெனரலாக அனுப்பிவைக்கும், அதுதானே நடைபெறும் வழக்கம், ஆரிய-ஆங்கிலேய ஆலிங்கந்தானே நாம் பல காலமாகக் கண்டுவரும் காட்சிஎன்று திராவிடமக்கள்எண்ணியிருந்தனர். ஆனால், சென்னை சர்க்கார், திராவிடரின் மனங்குளிரும் செயலைத்தைரியத்தோடு செய்துள்ளனர். தோழர் P. V. இராஜமன்னார் அவர்களை- ஒரு திராவிடரை-அட்வகேட் ஜெனரலாக நியமித்துள்ளனர். தோழர் இராஜமன்னார், பிரபலவக்கீல், முன்பு சென்னை உயர்நீதிமன்றத்தில் அமர்ந்திருந்து, இதுபோது மைசூர் உயர்நீதிமன்றத்திலே நீதிபதியாக அமர்ந்துள்ள தோழர் வெங்கடரமணராவ் நாயுடு அவர்களின் திருமகனார். தகுதிவாய்ந்த தோழர், இங்ஙனம், தக்கபதவிபெற்றதுகாணக்களித்து அவரையும்வாழ்த்தி, அவரைமேற்படி பதவியில் நியமித்தசர்க்காரையும் பாராட்டுகிறோம்.

# வாழ்க்கை ஒப்பந்தம்.

26—3—44 காலை 9 மணிக்குமேல், சின்னக்காஞ்சிபுரம் கந்தசாமிப்பிள்ளை செல்வன் கிருஷ்ணனுக்கும் மேல்சீசமங்கலம் வீராசாமிப்பிள்ளை செல்வி பட்டம்மாளுக்கும் ஷையார் செல்வன் வேணுக்கும் செம்பரம்பாக்கம் முனுசாமிப்பிள்ளை செல்வி இராஜம்மாளுக்கும் பெரியகாஞ்சிபுரம் குயவர்வீதி 104-நெம்பர் இல்லத்தில், திராவிடநாடு ஆசிரியர் உயர்திரு C. N. அண்ணாத்துரை M. A; அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. ஒருவிதமான சடங்குகளுமின்றி, வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தபின்னர், மேற்படி சீர்திருத்தத் திருமணத்தைக்குறித்துத் தோழர் A.K. தங்கவேலர், T. P. S பொன்னப்பா, C. V. M. அண்ணாமலை, வெங்கடராமன், திருவத்திபுரம் M. கந்தசாமி, பாலசுப்பிரமணியம், G. S. நாயுடு, M. இரங்கசாமி நாயகர், சடையாண்டி, ஆகியபலர், பேசினர். தோழர் அண்ணாத்துரை, முடிவுரையாக வாழ்க்கை இன்பம், பகுத்தறிவின் மேன்மை, என்பனபற்றி விளக்கிப் பேசியதுடன், தைரியமாகத், தமிழர் திருமணமுறையைக் கையாண்டு. செயலில் சீர்திருத்தவாதியாகவிளங்கும், தோழர் R. ஆறுமுகம் அவர்களின் வீரத்தைப் பாராட்டிப்பேசினார்.

# தமிழா கேள்!

8ம் பக்கத் தொடர்ச்சி.

போர்முனையிலே வாளுடன்வாள்பேச, ஈட்டிக்குத்தைக்—கேடகந்தடுக்கத் திட்டவேலினைப்பறித்து, எதிரியின் உயிரினைப்போக்கி நகைத்து, அஞ்சாவன்மையுடன் வெற்றிகொண்ட தமிழர், பஞ்சாங்கப்படை முன்மண்டி கொண்டு, வேதியக்கூட்டம் ஓதியவற்றைநம்பி, தர்ப்பைப்புல்லிற்குத் தலைவணங்கி நின்றனர்.

இனிக், கலையென்னும் பெயரால், ஆரியம் வீசிடும் வலையில் வீழ்ந்திடும் தமிழர் நிலையும், ஓவியத்தின் அழகு, சிலையின் நேர்த்தி காவியத்தின்அமைப்பு, இலக்கியத்தின்போக்கு, சொல்லினிமை, பொருள்நயம் என்றுபற்பலகூறி மயங்கிடும் மனக்குலைவும் வருத்தத்தை விளைவிப்பன. கம்பராமாயணமும், பெரிய புராணமும் இலக்கியப்பெயரால் மதக்கருத்தை மக்களுக்கு ஊட்டமுற்பட்டு, ஆரியஅடிமை ஏடுகளாய், தமிழர் தலைமீதுதாங்கும் நிலைபெற்று, தமிழர்விலைகொடுத்துவாங்கும், உணர்வுக்கொலைபுரியும்நஞ்சாய், அமைந்துள்ளன. மதமெனும்முள்ளில், கலையெனும் ஊன் அமைக்கப்பட்டிருப்பதறியாது, உணவெனக்கருதிச் சுவைத்திடச்சென்று அவ்வழி ஆரியத்தூண்டிலிற்சிக்கி வாழ்வினைப் பறிகொடுக்கின்றனர்-தமிழர். பழந்தமிழ்ப்பனுவலாம், புறநானூற்றில் ஆரியமும் நுழைந்துள்ளது என்பதுஎவரும் மறுக்கமுடியாதது. ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் வெற்றிச்சிறப்பு காணப்படும் ஒருபுறம். பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி யைப்பற்றிய பாடல்மற்றோர்புறம். இன்னும் பற்பலகாட்சிகள் உண்டு. அவைகளில் பூஞ்சாற்றூர் கௌணியன் என்னும்பார்ப்பான் வேள்வியைச் சிறப்பிக்கும் காட்சியுமுண்டு. இவையன்றி வடநாடுவென்ற செங்குட்டுவனும், மாடலவறையோன் என்னும் பார்ப்பான் சொல்லினை ஏற்றுவேள்வி செய்துள்ளான் என்றுசிலப்பதிகாரத்தில் (காதை 28) நடுகற்காதையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. வேள்வி ஆரியர்க்குரியதென்பதும், அவர்கள் வாழ்வுக்குத்துணையென்பதும் உணருங்காலை, ஆரியரை ஆரியநாட்டில்வென்று, திராவிடத்தில் ஆரியத்துக்கு அடிமையாய் வாழ்ந்தான் சேரன் என்பதைஎவ்வாறு மறுக்க முடியும்? தன்னுணர்வு பெற்றாலன்றித் தமிழன் அடிமைமயக்கம்நீங்கித் தன்னுரிமையாய் வாழ்வதற்கு வேறுவழியேது? ஆரியஆட்சி ஆட்டம்கொடுத்ததுதான் எதனால்?

திராவிடநாட்டின் தமிழ்ப்பகுதியில் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு கி. பி. (300-முதல்700) 7வது நூற்றாண்டுவரை ஆண்டபல்லவர்களைப்பற்றிப்பலரும் படித்திருக்கமுடியும். வடமொழியும், நால்வேதமும் இந்நாட்டில் ஒழுங்காக வளர்க்கப்படுவதற்குத் துணைபுரிந்தார்கள், என்பதன்றி வடநாட்டிலிருந்து கூட்டங்கூட்டமாகப் பார்ப்பனர்களை அழைப்பித்துத் தமிழகத்தில் பலவிடங்களில் குடியேற்றி, பிரமதாயம், தேவதானம் முதலியபெயரால் பலகிராமங்களை, முற்றூட்டுகளாக (வரியின்றி) வழங்கினராதலின், தமிழகத்தின் பல பகுதியும் இன்று சதுர்வேதி மங்கலங்களாகக் காட்சியளிக்கின்றன.

திராவிடத்தில், தமிழர்வரலாறன்றித் தெலுங்கர் வரலாற்றைக்கண்டாலும் இது விளங்கும். இங்கு நான்காவது நூற்றாண்டில் நுழைந்தகூட்டம் ஆந்திரநாட்டில் 2-ம் நூற்றாண்டில் நுழைந்துளது, ஆந்திரநாட்டைஆண்ட, இச்சுவாகு-சாதவாகனர்என்ற இருபரம்பரையினரும், தங்களை உயர்ந்த சாதியாராக்கிக்கொள்ள ஆரியத்திடை அடைக்கலம்புகுந்துள்ளனர். இச்சுவாகுவழியினரான மகாசாந்தமூலர் கி. பி. 200—218 வரை ஆண்டபோது பார்ப்பனர்களை வடநாட்டிலிருந்து அழைத்து, தானங்கள் பலபுரிந்து, யாகங்கள் பலநடத்தி, திராவிடத்தைஆரியக்களமாக மாற்றினர். [P. 44. Early Dynasties of Andra Desa [By B. V. Krishna Row M. A; B. L;]

"His reign was responsible for a greatwave of immigration, Particularly of Brahmana settlers in Andhrahdesa from the north of northwest. The immigrants came in all Probability, at the invitation of the Emperor Santamula, who after a lapse of morethan a century revived the Vedic sacrifices and Particularly the celebrated Vajabeya and Aswamedha.......Thus new Villages were founded and Brahmana settlements established."

மகாசாந்தமூலரின் மகன் வீரபுருடதத்தன் என்பவன் (கி. பி. 218—239) தன்காலத்தில் ஆரியநுழைவால் தன்நாட்டிற்குவந்த கேட்டினைஉணர்ந்து அதனை நீக்கமுற்பட்டான் [அவன் புத்தமதத்தைத்தழுவியதன்றித், தன்தலை நகரில் அமைத்த புத்தவிகாரங்களின் பார்வைச் சுவரில், பார்ப்பனியத்தை வெறுப்பதைக் காட்டஓர் இலிங்கஉருவத்தை உதைத்துத் தாழ்த்துவதாக லிங்கத்தின் உச்சியில் தன் குதிகாலைவைத்துக்கொண்டுள்ள நிலையில்) பல கற்பதுமைகள் செதுக்கிப் பதியவைத்திருந்தவை, இன்றுங்காணப்படுகின்றன. அவற்றில் பெரிய இரண்டு சிலாஉருவங்கள் மேற்கண்ட நூலில் படமெடுத்தும் காட்டப்பட்டிருக்கின்றன.

"The Ikshavahu king who was still then a follower of vedic Brahmanism and a worshipper of Siva inthe form of linga renounced his faith and became a true of bigoted convert to Buddism. (P. 58.)

Inthis pannel there is a representation of a monarch crushing with his right heel, a stone linga, which is encircled by a many headed serpent. The linga and the serpent apparently symbolise Bramanism and the worship of Mahesvara. The Bramamism is denouneed by the king in the presenee of his ministers and high dignitaries of State...

It is probable that "Sri Vira purushadatha" attempted to crush the tide of Brahmanism which received great impetus and revival under the aegis of his illustrious father, Vasis-thi puthra, sri Santhamula the great, only, two decades ago. (Page 59-60.)

ஆந்திராவாலும், ஆண்டும் ஆரியப் படையெடுப்பு கி. பி. 200-ல்தான் வெற்றி பெற்றதென்பதும் அஞ்ஞான்றும் அவர்களுக்கு எதிர்ப்பு இருந்ததென்பதும் தெரியவருகின்றது. திராவிடநாடு பிரிவினைக்கு, ஆந்திரவரலாறு ஆதாரம் பல தருகின்றது. ஆந்திரத்தோழர்கள் இதனை உணரும் நிலைவிரைவினில் ஏற்படவேண்டும்.

இலக்கியங்களிலே பற்பல மூடநம்பிக்கைகள்புகுந்து, பழமைமலிந்து, மக்கள்கருத்தைப் பாழாக்குகிறது என்பதுஒருபுறமிருக்க, புலவர் பெருமக்கட்கே உரிய இலக்கணங்கள் நிலைதான் என்ன? தொல்காப்பியத்தில் சிலஇடைச்செருகல். வீரசோழியமும், நன்னூலும் வடமொழி இலக்கணத்தைத் தழுவியவை. இவைகளின் உரைகளோ ஒப்பியன்மொழி தோன்றாக் காலத்திலேயே தமிழ்மொழி வடமொழி ஒப்பிலக்கணங்களாக அமைந்தன. ஆனால் பிற்காலஇலக்கணங்களில் "ஐந்தெழுத்தால் ஒருபாடையுண்டென அறையவும் நாணுவரே மக்கள்" என்று இலக்கணக்கொத்துச், சாமிநாததேசிகர் கூறுகின்ற அளவுக்குத் தமிழ் இழிந்தது. எதனால்? வடமொழி இலக்கணத்தில் ஆழ்ந்து தமிழ்மொழி இலக்கணத்தைப் புறக்கணித்ததாலன்றோ?

[தொடரும்]

# பார்வதி பி. ஏ;

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"மனசிலே, அது இருந்துண்டு என்னமோ வேதனைபண்றதே"

"அப்படின்னு சொல்லு. மனசுநிம்மதியாகும், நேக்கு இந்தச் சொப்பனங்களிலே நம்பிக்கை கிடையாது"

"உமக்கு எதிலும் நம்பிக்கை கிடையாது. நான் கண்டதுபோல நீர்கண்டிருந்தா, தெரியும் உமக்கு."

"சரி, சரி, நான் கர்ப்பமா இருப்பது போல நீ இருந்தா உமக்குத்தெரியும்அந்த வேதனைன்னுகூடப்பேசுவேபோலிருக்கு சரி, விஷயத்தைச்சொல்லு,என்னசொப்பனம் கண்டே?"

"நேத்துமாலையே எனக்குக்கொஞ்சம் மயக்கமா இருந்தது. என்னமோ கிடக்குன்னு, வழக்கம்போல சாட்டேட்டுப்படுத்துண்டேன்......"

"அதுதான் தப்பு! எப்போ, மயக்கமா இருந்ததோ, அப்போ சாப்பிடலாமோ? லங்கணம் பரம ஔஷதம்னு பெரியவா சொல்வாளே! சாப்பிடாமேபடுத்திருந்தா சொப்பனமே இருந்திராது."

"பெரிய டாக்டர்தான், சும்மாஇரும். கர்ப்பிணிகள் பட்டினியாஇராத்திரியிலே படுக்கக்கூடாதுன்னு சகலரும்சொல்வா. அதனாலேதான் விளாங்காயளாவுசாப்பிட்டுவிட்டுப் படுத்தேன். நன்னாத்தான் தூக்கம் வந்தது. பாதிராத்திரி இருக்கும். யாரோ, என்பக்கத்திலே வந்துபடுத்தா"

"என்னடி இது?"

"சொப்பனத்திலே"

"அப்பா! நீ சொல்ல ஆரம்பிச்சதே நேக்கு ஒரே திகிலாபோயிடுத்து."

"படுத்தது, ஆணாபெண்ணான்னு சரியாத்தெரியலெ. யாரது, யாரதுன்னு நான் கேட்கக்கேட்க, யாருன்னு தெரியலையான்னு சொல்லிண்டே, என்தாடையைப் பிடிச்சிக்கிள்ளிண்டு, என்னென்னமோ கோணல் சேஷ்டைகளெல்லாம் செய்ய ஆரம்பிச்சுது அந்த உருவம்"

"என்ன சேஷ்டைசெய்தது?"

"சேஷ்டை செய்ததுன்னா எல்லாம் நீங்கசெய்வேளே சேஷ்டைகள், அது போலத்தான். நான் ஒருதிமிருதிமிரிண்டு எழுந்தேன். உடனே கலகலன்னு சிரிச்சிண்டு, ஏண்டி? ஆண்டாள், நான்தெரிலையா நான்தான் உன் ஆத்துக்காரருக்கு முதல் ஆத்துக்காரியா இருந்தவன்னு சொல்லிற்று அந்த உருவம்"

"அந்தச் சனியனா உன்சொப்பனத்திலே வந்தா?"

"நடந்ததேக்கேளும், நான் பயந்து போய், காலைத்தொட்டு நமஸ்காரம்செய்துண்டு, எங்கேவந்தேள்? என்ன வேண்டும் நோக்குன்னு கேட்டேன். உடனே என் வயித்தைக்காட்டி, உள்ளேஇருக்கே, அதுவேண்டும், அதைஎடுத்துண்டுபோகத்தான் வந்தேன், என்று சொல்லிவிட்டு, உம்ம முதல்சம்சாரம், சிரிச்சா. நேக்கு ஒரே அழைவந்தது. ஐயயோன்னு கூவினேன், உடனே என்வாயை அவ மூடிவிட்டு, என்னை ஒருபயங்கரமான பார்வை பார்த்து, அடி ஆண்டாள்; உனக்குக் குழந்தை பிறந்தால் அடுத்த நாளே உன்புருஷன் உயிர்போய்விடும், ஜாதகபலன் அப்படி இருக்கு. குழந்தை பிறக்காவிட்டால் அவர் தப்புவார். அது தெரிந்ததுதான் பகவான் எனக்குக் குழந்தை இல்லாமலே செய்தார். இப்போது உன் வயிற்றிலே உலவுவது குழந்தையல்ல, நம்ம ஆத்துச்காரரின் உயிரைக் குடிக்கப்போகும் எமன். அதைக்கொன்றால் அவர் பிழைப்பார், அதுபிழைத்தால் அவரைக்கொன்றுவிடும்என்றுகூறினாள்"

இது என்னடி, மகா பயங்காமா இருக்கே! குழந்தைபிறந்தால் நான் சாவேனா? ஜாதகம்அப்படியா இருக்ககு?"

"நேக்கென்ன தெரியும். குங்குமமும் மஞ்சளும் பூசிக்கொண்டு அவள் குலுங்கக் குலுங்கச் சிரிச்சிண்டு சொன்னா. நேக்குப் பயத்தாலே உடலே வியர்த்துப் போச்சு. கைகூப்பி நமஸ்காரம்செய்து, அம்மா, நேக்கு இதுமாதிரி கஷ்டம்வரச் செய்யாதே. உனக்குக்கோயில்கட்டிநமஸ்கரிக்கிறோம்னு கெஞ்சினேன். என்னாலே என்னடி செய்யமுடியும்! உன் வயித்திலே அந்தக்கரு வளரவளர, அவர் உயிர்கொஞ்சம் கொஞ்சமா போயிண்டே இருக்கு. இதை என்னாலே தடுக்க முடியாது. ஒரே வழிதானிருக்கு. உன் கருவை நான் சிதைத்துவிடுகிறேன், பிறகுஉன் புருஷன் தப்புவார்னு சொன்னா"

"நீ என்ன சொன்னே?"

"என்னசொல்வேன், புருஷனைவிடப் பத்தினிகளுக்கு வேறேஎன்னவேண்டும்? நான், கருப்போனாலும் போகட்டும்அவர் தப்பினால் போதும்னு சொன்னேன். உடனே அவ, என் வயித்தைப்பிடிச்சு ஒரே அழுத்து அழுத்தினா. எனக்குஉயிரே போவது போலிருந்தது. அடுத்தவிநாடி நான் விழிச்சிண்டேன்"

"சனியன்! இவ்வளவும் சொப்பனந்தானே!"

"சொப்பனந்தான். ஆனால், கர்ப்பம் கரைந்துபோயிருக்கே!" என்றுகூறி ஆண்டாள் தேம்பினாள். அவரும் தன்னையறியாமல் இரண்டோர் துளிகண்ணீர் விட்டார். அந்த நேரத்திலே டாக்டர் லலிதகுமாரி, அங்குவந்தாள்.

(தொடரும்)

வெளிவந்துவிட்டது!

பெரியார் பெருந்தொண்டு.

தமிழ்நாட்டின் தனிப்பெருந்தலைவரான பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் தொண்டுகளைப்பற்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறும் எளிய நடையிலமைந்த ஓர் கவிதை நூல்! தமிழாசிரியர் S சிவப்பிரகாசம் அவர்களால் இயற்றப்பெற்றது.

தனிப்பிரதி விலை. அணா 8.

0—8—9 ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புத்தகம் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

ஏஜண்டுகட்கு,

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. 25% கமிஷன் தரப்படும். விவரத்திற்கு எழுதுக.

மானேஜர்,
"பூங்கொடி" பதிப்பகம்,
43- சேன்த்தெரேஜ் மடத்துவீதி,
புதுச்சேரி.

குறிப்பு:-8—4—44ல் மதுரையில் சந்திரோதய நாடகத்தின் போது இந்நூல் விற்கப்படும்.

## 16-வது ஜஸ்டிஸ் கான்பெட்ரேஷன்

சேலத்தில் நடைபெறும்.

2—4—44 ஞாயிறன்று காலை 10 மணிக்கு, சேலம் ஜஸ்டிஸ் மாநாட்டின் வரவேற்புக் கழகக்கட்டிடத்தில், வரவேற்புக் கழகக்கூட்டம் நடைபெறும்.

I மாநாட்டின் தேதி.

II காரியதரிசியால் கொண்டுவரப்படும் இதர விஷயங்கள் அதுசமயம் யோசிக்கப்படும்.

மாநாட்டை ஏப்ரல் மாதத்திலேயே நடத்தச்சகல முயற்சிகளும் நடைபெறுகின்றன.

மாநாடு சம்பந்தமாக வால்போஸ்டர், நோட்டீஸ் ஆகியவைகள் வேண்டியவர்களும், மற்றும் மாநாடு சம்பந்தமாக ஏனைய தகவல்கள் அறியவிரும்புகிறவர்களும் கீழ்க்கண்டவிலாசத்துக்கு எழுதவும்.

காரியதரிசி,
ஜஸ்டிஸ் மாநாடு காரியாலயம்,
கோட்டை,
சேலம்.

# ★ தமிழா கேள்! ★

தமிழனே! கேள், "நீவாழ்ந்தவாழ்வும் இன்றுள்ள தாழ்வும் இருக்கும்விதத்தை! ஆரியம் உன்னை அரித்ததை! அருந்தமிழரின் ஆற்றல் அழிக்கப்பட்ட துக்ககரமான வரலாற்றை. இலக்கியமும் இலக்கணமும் உனக்கு இடர்ப்பாடுஉண்டாக்கினவகையை என்று எடுத்துக்காட்டுகிறார், இளந்தமிழர், இனஎழுச்சியின் உருவம், தோழர் அன்பழகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகமாணவர். ஆர்வமிக்கவர், உரிமைப்போரில்ஊக்கங்காட்டுபவர். அவர் குடந்தையில்கூடிய திராவிடமாணவர் மாநாட்டிலே ஆற்றியவிரிவுரை இங்கு தரப்பட்டிருக்கிறது. இளைஞர்உலகின் இன்றைய எண்ணத்தைக் கண்டுகளிமின்.

தலைவரவர்களே! திராவிடத் தோழர்களே! ஆரியநண்பர்களே! 'தமிழா! கேள்' என்னும் தலைப்பினைத்தந்தது, தமிழன் இன்னும் பலவற்றைக்கேட்டுணர்ந்து தன்னிலை யுணரவேண்டியநிலையில் இருக்கிறான் என்பதனாலாகும். "தமிழனே நீ கேளாய்—உன்பால்சாற்ற நினைத்தேன் பலநாளாய்" என்றபுதுவைக்கவியின் புதுமைப்பாவின் பல்லவி, நான் கூறவிழைபும்பலவற்றில் ஒருசிலவற்றையாவதுகூறத் "தமிழா! கேள்" என்றுஎன்னை அழைக்கச்செய்தது. தமிழா! இதுவரை பலவற்றைப்பற்றிய பழையஉரைகளைக் கேட்ட தமிழா! மாநாடுகளில் நடைபெறும் விரிவுரைகளைக்கேள்-உற்றுக் கேள்-ஒலி காதினில் ஒலித்திடாவிடில் உரத்துப் பேசக்கேள்-விளங்காவிடில் விளங்கக் கேள்—ஐயமுற்றால் ஆதாரங்காட்டக் கேள்—"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றவகையில் ஆய்ந்து பார்; தமிழா!

தமிழா! இன்னும் மயக்கந்தெளியாவிடில், கூறியதுவிளங்கிடயாராவதுஆரிய நண்பரைப் பார்த்துக்கேள்! ஐயரிடமாவது செல்; ஐயந்தீர்த்துக்கொள்ள-உண்மையைஉணர்ந்த இனந்தான்அது. ஆனால் ஐயமென்றுகழறிடாதே! உண்மை உணர்த்திடார் (உணரினும்) ஆனால் நாங்கள் கூறுவதைக்கேள்! அவ்வாறே அவரிடம்கூறு, அவர் ஆமென்பார். இல்லையானால் மறுத்திடவாவது துணியார் உண்மையை உணர்வாராகலின். குடந்தை மாணவர் மாநாட்டின் வரவேற்புரை, இது ஓர் அரசியல் இயக்கமன்று என்று எடுத்துக்காட்டித்திராவிட இனஎழுச்சி, பிறஇனத்தினை அழிக்கும் முயற்சியன்று என்றுவிளக்கி, இனியும் நம்மை எதிரிகள் எனக்கருதிக்கொண்டு எக்கூட்டத்தாரேனும் அரசியலார்துணை கொண்டோ, மற்றும் கையாண்டுவரும் சூழ்ச்சித்திறனாலோ மறைந்தோ வெளிப்படையாகவோ இவ்வெழுச்சியை அடக்க முற்படுவாரானால், இவ்வியக்கம்ஓரரசியல் இயக்கமாகமாற, அவர்களே அடிப்படையாவார்கள் என்று எச்சரித்துத் திராவிட இனத்துடன் ஆரியர்நடத்த முற்படும் போராட்டத்திற்கெலாம் வரவேற்புரை வழங்கிற்று.

கரந்தைப்புலவர் திரு. பெரியசாமி அவர்களின்திறப்புவிழாச்சொற்பொழிவு, கரந்தவாழ்வினைக் கைக்கொண்ட ஆரியரின் தமிழகவெட்சிப்படலத்தைத், தமிழரின்முன்னேற்றஉரையாகவும், வளம்வழங்கும் வாய்மொழியாகவும் இனிஎன்றும் தமிழர்க்கு முன்னேற்றமேயன்றிப் பிறிதில்லை என்று எவர்க்கும் இயம்பிடுவதாகவும் இருந்தது.

அண்ணாத்துரையின் நல்வரவு "வீழ்ந்த திராவிட இனம் இனி எழுச்சி பெற்றேதிரும்" என்று உறுதிதருவதாக உள்ளது. தமிழகத்தின் தனிப்பெருந்தலைவர் பெரியார் ஈ. வே. ரா இன்று இளைஞரிடம்வைத்துள்ள அளவற்ற நம்பிக்கையே நம்முடைய கடமையை நமக்கு உணர்த்துகின்றது.

இயலிசைக்கூத்து என்னும் முத்தமிழும், மூவேந்தரின் ஆட்சியும், வளமிகு காட்சியும் போற்றுறுமாட்சியும் பெற்றுத் திகழ்ந்த தமிழகம், இன்றுபெற்றுள்ள இழிநிலைக்கு மக்களின் மாண்புள்ள "வாழ்வு" "தாழ்வாக" மாறியதற்கு, இந்நாட்டுமக்களின் அறிவுவறிதாகும்படி, பற்பலமாற்றாரின் நுழைவால் புகுத்தப்பட்ட பொருந்தாக்கருத்துக்களே அடிப்படையாம். ஐம்பொறிகளின் வழியாகப் பெறும், ஐம்புலனுணர்விலும் வேறுபாடுடைய ஓரறிவுமுதல் ஐயறிவுயிர்கள் வரையிலும் அவைபெற்றுள்ள அறிவாலேயே உயிர்வாழ்வனவெனினும், மனிதன் இயற்கையால் பெற்றுள்ள "உய்த்துணரும் ஆற்றலே" அவனைப்பிறவற்றைவிட வாழ்வினில் உயர்த்தியதாகும். அந்நிலைபெற்றும் (சங்ககாலம்) பின்தோன்றிய "கற்பனைவழி" உள்ளத்தைச் செலுத்தி, உண்மையை உய்த்துணரமுயலாது நீரின்வழி மிதவைபோலவும், தன் செயலற்றுப் பொய்வழிஇயங்கும் மயக்க அறிவினனாகிப் பின்னும் இவ்விழி நிலையுற்றான் தமிழன்.

இன்றைக்கு 2000 ஆண்டுகட்கு முன்பே திராவிடர் நாகரிகமுடையராய், நானிலத்தில் புகழப்படுமளவு, அலைகடலை அடக்கி, அந்நியநாட்டாருடன் வாணிபம் நடத்தி, வளமுறவாழ்ந்தனர் என்பதும், இந்தியத்துணைக்கண்டம் முழுவதும் விரிந்துபரந்து வாழ்ந்தனர்என்பதும், பற்பல எடுத்துக்காட்டுகளால் நிறுவப்பட்டுள்ளன. தமிழகத்தில் ஆதிச்சநல்லூரிலும் அரிக்கன் மேட்டிலுமன்றி ஐதராபாத்திலும் திராவிடரின் பழமைக்கு ஆதாரங் கண்டோம். ஆரியர் 3500 ஆண்டுகட்கு முன்பேஇந்தியாவில்புகுந்து இன்பவாழ்வு தொடங்கிவிட்டனர் சிந்துநதிக்கரையில் என்று கூறிடும் அந்தப்பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட இருபெருநகரங்கள், ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு அங்கு ஆண்ட திராவிடர் கையாண்ட நாகரிகக்கருவூலங்களாய் இன்று நமக்குக்கிடைத்திருக்கின்றன. அவைதாம் அங்குவாழ்ந்தது யாரப்பாஎன்று கேட்பவர்க்கு, இக்கல் வெட்டெழுத்துக்களையும் புதைபொருளையும்-பாரப்பா-புரியும் என்று சுட்டிக்காட்டித் துணைசெய்யும் "ஹாரப்பாவும்" அதன் மருங்கே காணப்படும் "மகன்ஜ-தாரோவும்" ஆகும்; ஜெர்மன் நாட்டுக்கலையறிஞர், மாக்ஸ் முல்லர், இந்தியக்கலையின் அடிப்படை ஆரியக்கலை, இந்தியமொழிகளின் மூலமொழி ஆரியமொழி என்று கூறியது தவறுஎன்று எவரும் உணர்ந்திடும் அளவிற்கு சர்ஜான்மார்ஷல் என்ற அறிஞர்—வடஇந்தியாவிலும் தொன்று நிலவியது—திராவிடக்கலையே என்றுஎடுத்துக்காட்டிடவும், ஆரியம் திராவிட நாகரீகக்கலப்புடையதே என்று கூறிடவும் இவையே அடிப்படையாம். பம்பாய் புதைபொருள் ஆராய்ச்சிக் கழகத்தலைவர் அறிஞர் ஹீராஸ் அவை, திராவிடர் வாழ்ந்ததைக்காட்டுவதே என்றும், ஆண்டுள்ள கல்வெட்டுகளிலுள்ள வடிவ (உருவ) எழுத்துக்கள் பெரும்பாலும் பாண்டியர் (மீனவர்) ஆட்சியைக் குறிப்பவையாயுள்ளன என்றுங் கூறியுள்ளார்.

தென்னிந்திய மொழிகளை நன்றாய் ஆராய்ந்த அறிஞர் கால்டுவெல், இவை வடமொழியினின்று தோன்றியவைஅல்லவென்றும், வடமொழி, திராவிடத்தினின்று கடன்பட்டுள்ள தென்றும் கூறியுள்ளார். இந்தியக்கலையின் அடிப்படை திராவிடக்கலையே என்று டாக்டர் கில்பர்ட் ஸ்லேட்டர் அவர்களும் இந்தியக் கலைகளை ஆராய்ந்து வெளியிட்டுள்ளார்.

இனி, திராவிடம் தெற்கில்சிறப்பதேன் என்பதும், இந்தியத்துணைக் கண்டத்தின் உண்மை வரலாறுகாண, வரலாறு, வேதகாலவேதியர் சிந்துக்கரையிலும் கங்கைக் கரையிலும் வாழ்ந்ததிலிருந்து தொடங்குவது மாறி, வைகை, காவிரி, பாலாறு ஆகிய ஆற்றோரங்களில் அமைந்த அரசுகளின் பழமையிலிருந்து தொடங்கப்படவேண்டும் என்றும், அதுவேஉண்மையான வரலாற்றை உணரவழியென்றும், பேராசிரியர்—மனோன்மணீயம், சுந்தரம்பிள்ளை

(8ம்-பக்கம் பார்க்க.)

## தமிழா கேள்.

7ம் பக்கத் தொடர்ச்சி.

அவர்கள்கூறியது மறைக்க, மறுக்க, மறக்க முடியாததோர் உண்மையாகும். இந்திய வரலாற்றின் எட்டைப்புரட்டினால், வரலாற்றுக்காலத்தில்வாழாத வடநாட்டரசன் இராமன், இடைநாட்டுவானரர் துணைக்கொண்டு, அணைகட்டிக், கணைதொடுத்து, இணையற்ற தென்னாட்டுப் பேரரசன் இராவணனை அழித்தசெய்தி இதிகாசப்பெயரால் இயம்பப்படுகிறது. பாண்டவரிடை நடந்தபோரும், நூற்றுவர் ஐவரிடைஇருந்த நியாயமும் கூறப்படுகிறது. ஆனால் பாரதப்போரில் பெருஞ்சோறளித்தசேரனைப்பற்றிய குறிப்புக்காணப்படுவதில்லை.

இரண்டாம் நூற்றாண்டில் (கி. பி. 144) சேரநன்னாட்டில் ஆண்டசேரன் செங்குட்டுவன், வடநாட்டில் கனகன், விசயன்என்ற அரசரிருவர்விருந்திடைபுகன்ற பொருந்தாமொழிகேட்டு, கண்ணகிக்குக் கற்சிலைஎடுக்க எண்ணியதுடன் ஆரியர்க்கும் சிலைவலி காட்டக்கருதி, வடநாடு சென்றுவாகைசூடி, வடஇமயத்தில் கற்கொண்டு, கனகவிசயர் தலைமீதுஏற்றி, சங்கைகடந்துகான்கடந்து, மலைபல கடந்து தென்னாடுகொண்டுவந்தசெய்தி ஏன் வரலாற்றில் இடம்பெறவில்லை? வரலாற்றுக்காலத்தில் நடைபெற்று செங்குட்டுவனின் உடன்பிறந்தஇளவல் “இளங்கோ” சிலப்பதிகாரம் என்ற முத்தமிழ்க்காப்பியக்கலத்தில் இட்டுத்தந்த உண்மைநிகழ்ச்சியன்றோ? அஃது.

தமிழில் கூறப்பட்டுள்ளதாலும், தென்னாட்டார் வடநாட்டாரைவென்றது என்பதாலுமே இதுவரலாற்றில் இடம்பெறவில்லைஎன்பதை உணர்ந்தும் இனியும் திராவிடஇனம் தனியிடம்கேட்கத்தயங்குமா? திருமாவளவனும் கரிகால்வளவனும், ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனும், பெருஞ்சோற்றுதியன் சேரலாதனும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், பிறரும் வாகையுடன் வாழ்ந்ததை நாம் அறிவோம். ஆதாரமுண்டு. சேரலாதன் அளித்த பெருஞ்சோறு, வடநாட்டில் வாடிய ஆரியர்க்குத், தமிழகவளனைச் சுவைக்கவாய்க்கு வாய்ப்புக் கிடைத்ததால், வாழ்வுக்கு வாய்ப்புக் கிடைத்த தென்று தென்னாடு நுழையத்தூண்டிய தோஎன்ற ஐயமும் உண்டு. வள்ளற்றன்மைதமிழரின் வாழ்வைப் பாழாக்கவா பயன்படவேண்டும்! என்ற வருத்தமும் உண்டு. இராச இராசசோழனின் வெற்றியும் இராசேந்திரன் பர்மாபடையெடுப்பும், கங்கைகொண்ட சோழனின் வரலாறும், மறந்தோமில்லை. இவையெல்லாம் போரிலேகண்ட வெற்றிகள். பற்பலவெல்கள் பாய்ந்ததால் விளைந்தவாகைகள். ஆனால் அன்றிருந்து இன்றுவரை, ஆரியத் தொடர்பால், தமிழரின் வெற்றி, இடம் பெறாத அளவுக்கோ—இடம்பெற முடியாத அளவுக்கோ அல்ல, இடம்பெறத் தகுயற்ற அளவிற்குத் தமிழர் அறிவிழந்துள்ளனர். ஆரியர் அனைவருங்கற்றவர் தமிழர் யாவருங் கல்லாதவர் (100க்கு 95) என்றநிலை. பேதமற்றமனமும், காதல் கனியும், வீரமும்—ஈரமும் நிறைந்தபோதே அறிவினை ஆண்டவன் பேரால் அடகுவைத்து, விதியின் விளையாட்டிலே ஈடுபட்டனர்.

(5ம்பக்கம் பார்க்க.)

1944 ஏப்ரல் 8 தேதி!

பரமசிவன் வந்துவந்து போவார்! பக்தனுக்குத் துக்கம் வரும், பழயபடி தீரும்!! இதுவே நாடகமாக இருக்கும் இன்றைய நிலையை மாற்றி கலை, ஆரியவலையாகாமல் பாதுகாக்க ஒரு முயற்சி, அறிவு வளர்ச்சிநாடகம்.

புரோகிதப் புரட்டு! இரசவாதம்! மடாதிபதிகள் கோலாகலம்! வைதீகத்தின் விளைவுகள் ஆகியவற்றைச் சித்தரித்துக்காட்டும் நாடகம்!

‘திராவிட நாடு’ திராவிட நடிகர்கழக’ உதவிநிதிக்கு.

# சந்திரோதயம்

மதுரை, கோபாலகிருஷ்ண டாக்கீசில்,

விருதுநகர் நகராண்மைக் கழகத்தலைவர், ராவ்பகதூர்,

வி. வி. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தமிழரே வருக!

தங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன், (உதவிநிதிக்கமிட்டித் தலைவர்)

ஏ. வேணுகோபால், (மதுரை, S. I; L. F; செயலாளர்)

டிக்கட் ரூ. 5, 3, 2,

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at “Dravida Nadu” Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.